# வேதாகமத்தின் ஏவுதலுக்கான உள்ளான ஆதாரங்கள்

வேதாகமத்தின் மீதுள்ள விசுவாசத்தைத் தாங்கும் மிகப்பெரும் தூண்கள் இரண்டினை, தெளிவான இருதயங்கள் (கடந்து போன) நூற்றாண்டுகளினூடே கேட்டு உணர்ந்துள்ளன: எசேக்கியா வெட்டிய சுரங்க வாய்க்கால்[1] கண்டு பிடிக்கப்பட்டது போன்ற வேதாகமத்திற்கு புறம்பே காணப்படும் ஆதாரம் மற்றும் வேதாகமத்தின் தெய்வீகத் தோற்றம் பற்றி அதனுள்ளேயே காணப்படும் ஆதாரம். இப்பாடமானது உள்ளான ஆதாரங்களை மட்டுமே எடுத்துரைக்கும்படி வரையறுக்கப்பட்டுள்ளது: (1) பரலோகத்தில் உள்ளவரே இதை எழுதக் காரணமாயிருந்தவர் என்று சுட்டிக்காட்டும் வேதாகமத்தின் பொதுப் பண்புகள், (2) வரப்போகிற மேசியாவைப் பற்றிய பழைய முன்னுரைத்தல்களின் செயல் விளைவு, (3) இயேசுவின் நபர்த்துவம் மற்றும், (4) அவிசுவாசிகளின் சிந்தனையின் மீது வேதாகமம் கொண்டிருக்கும் செயலுருவாக்கம்.

### *"ஒன்றுதான் உள்ளது!"*

ஸ்காட்லாந்துக் கவிஞரும் நாவல் ஆசிரியருமான சர் வால்ட்டர் ஸ்காட், இருபதினாயிரம் புத்தகங்கள் உள்ள அறையில் இறந்து கொண்டிருந்த வேளையில், அவரது நண்பர் அவரிடத்தில் என்ன புத்தகம் அவருக்காகப் படிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்? என்று கேட்ட பொழுது வியப்பு அடைந்தார். "இதைக் கேட்கத் தேவையா? ஒன்று தான் உள்ளது!" என்று கூறினார் (T. Harrison, *Three Hundred Testimonies in Favor of Religion and the Bible by Distinguished Men and Women*).

வேதாகமத்தின் தலை சிறந்த பல அம்சங்கள் இதைப் பரலோகத்தில் உள்ளவரே எழுதச் செய்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன: பல்வகைத் தன்மையின் மத்தியில் வியக்கத்தக்கதொரு ஒருமைப்பாடு என்பது வேதாகமத்தின் முக்கியப் பண்பு ஆகும். எளிமை மற்றும் ஆழம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் பண்பில் வேதாகமத்திற்கு இணையாக வேறு

எந்தப் புத்தகமும் இல்லை. நடுநிலை தவறாமை, துணிவு மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பண்புகளில் இணையற்ற விதத்தில் தேவனுடைய வசனமானது முன்னிறுத்தப்படுகின்றது. இது ஒன்று மட்டுமே காலத்திற்கேற்ற மாறுதலோ மறுகண்ணோட்டமோ தேவைப்படாத முழுமைப் பண்புள்ள புத்தகம் ஆகும்.

இலக்கியத்தில் உயர் வகையுடைய தலை சிறந்த படைப்புகள் என்ற வகையில் பல புத்தகங்கள் இருக்கின்றன, இருப்பினும் மிகச் சிறந்தது என்று விரிவாக்கப்படும் பொழுது "ஒன்றுதான் உள்ளது." பழங்கால (எழுத்துப்) பணி எதைக் காட்டிலும் மிக மேலானதாக நிற்பது தேவனுடைய வசனமே யாகும். சார்பு நிலையில் பழங்கால (எழுத்துப்) பணிகளில் சில மட்டுமே நமது நாட்களாகிய இன்றைக்கு வரைக்கும் நிலைநிற்கின்றன, இருந்தாலும் பரிசுத்த வேதவசனங்களின் பல பிரதிகள் நம்மிடத்தில் உள்ளன.

வேதாகமத்தின் இந்தப் பண்புகள் ஒவ்வொன்றும் "வேதாகமத்தின் பண்புகள்" என்ற பாடத்தில் ஆழமாய் விவரிக்கப்படும்.

## "தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா?"

"அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்" (அப். 26:27) என்று பவுல் வியந்த பொழுது, பழைய ஏற்பாட்டை வினயமாய் எடுத்துக் கொண்டிருந்த அகிரிப்பா அரசரின் முன்பு தாம் நிற்பதை அறிந்திருந்தார் என்பது உறுதியாகும். வரப்போகிற மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு முன்னுரைத்தல்களில் அகிரிப்பா அரசர் படித்திருந்தது எவ்வளவு? நாம் அறிவதில்லை; ஆனால் அவர் தம்மிலேயே ஒரு பகுதி யூதராய் இருந்தார்.[2] யூதரோ அல்லது புறஜாதியாரோ, - இயேசுவின் வருகைக்கு நீண்ட காலம் முன்பு எழுதப்பட்ட புத்தகமாகிய - பழைய ஏற்பாட்டைப் படிக்கும் எவரொருவரும், தீர்க்கதரிசிகள் மேசியாவைக் குறித்து எவ்வளவு தெளிவாய் முன்னுரைத்தார்கள் என்பதைக் காணும் பொழுது தீர்க்கதரிசிகளை நம்பாதிருக்க முடியாது.

இயேசுவைப் பற்றிய சாட்சியமே தீர்க்கதரிசனத்தின் முதன்மை நோக்கமாய் இருந்தது (வெளி. 19:10இ). தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுத்தார்கள் (அப். 10:43). ஸ்திரீயின் வித்தானவர் சாத்தானுடைய தலையை நசுக்குவார் (ஆதி. 3:15; கலா. 4:5; எபி. 2:12-14). அவர் ஆபிரகாமின் சந்ததியாவார் (ஆதி. 18:17; கலா. 3:16), யூதா கோத்திரத் திலிருந்தும் (ஆதி. 49:10), தாவீதின் குடும்பத்திலிருந்தும் (சங். 89:3, 4) அவர் வருவார். அவர் பெத்லகேமில் (மீகா 5:2) ஒரு கன்னிகையிடத்தினின்று (ஏசா. 7:14) பிறப்பார். முன்னோடியொருவர் அவரது பாதையை ஆயத்தம் செய்வார் (ஏசா. 40:3). அவரது கலிலேய ஊழியம் முன்னுரைக்கப்பட்டது (ஏசா. 9:1, 2). மனுஷீகத்திற்கு மேலான அவருடைய ஞானமும் (ஏசா. 11:1-3) மற்றும் அவரது வல்லமையான செயல்களும் (ஏசா. 35:5) சித்தரிக்கப்பட்டன. அவர் தம் தகப்பனுடைய வீட்டைப்பற்றி அவருக்குள் பற்றியெரியும் வைராக்கியமும் கூட முன்னுரைக்கப்பட்டது (சங். 69:9;

*யோவா. 2:16, 17).*

*அவர் துக்கம் நிறைந்தவராயும், பாடு அநுபவிக்கிறவராயும், அக்கிரமங்களைச் சுமப்பவராயும் இருப்பார் என்று முன் ஆண்டுகளில் சித்தரிக்கப்பட்டவை திகைப்பூட்டும் உண்மைகளாய் இருந்தன (ஏசா. 53:3, 11). அவர்மீது அடிகள் சுமத்தப்பட்டாலும், மறுப்பெதுவும் தரப்படாது (ஏசா. 53:5, 7). அவர் புறக்கணிக்கப்படுவார் (ஏசா. 53:3), மற்றும் அவரது சீஷர்கள் கோழைகளாய் இருப்பார்கள் என்று முன்னுரைக்கப்பட்டது (சக. 13:7). முப்பது வெள்ளிக்காசுக்காக (சக. 11:12) அவர்களில் ஒருவன் அவரைக்காட்டிக் கொடுப்பான் (சங். 41:9). அந்த இலஞ்சம் தரப்படுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே, இரத்தக்கிரயமான அப்பணம் எறிந்து விடப்படுதல் பற்றி முன்னுரைக்கப்பட்டது (சக.11:13). அவர் துப்பப்படுவார் என்பதும் (ஏசா. 50:6) மற்றும் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார் (ஏசா. 53:12) என்பதும் முன்னுரைக்கப்பட்ட உண்மைகளாகும். அவர் பரியாச வார்த்தைகளால் (சங். 22:7, 8) மட்டுமின்றி கசப்புக் கலந்த காடியினாலும் (சங். 69:21) ஏளனம் பண்ணப்படுவார். அவரது உடையின் பேரில் சீட்டுப் போடப்படும் (சங். 22:18). அவரது கைகளும் கால்களும் உருவக் குத்தப்படும் (சங். 22:16இ) ஆனாலும் அவரது எலும்புகளில் ஒன்றும் முறிபடாது (சங். 34:20). சிலுவையில் அறையப் பட்டவர் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக ஜெபிப்பார் (ஏசா. 53:12). ஐசுவரியவானுடைய கல்லறையில் அவர் வைக்கப்படுவார் (ஏசா. 53:9) ஆனால் அவரது சரீரம் அழியாது (சங். 16:10). அவர் பரலோகத்திற்கு எழுந்தருளுவார் (சங். 45:6; 110:1-3).*

*கேனன் லிடான் அவர்கள், பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றிய 332 தீர்க்கதரிசனங்களைக் கணக்கிட்டுள்ளார் (*Floyd E. Hamilton, *The Basis of the Christian Faith). ஆல்ஃபிரட் எடர்ஷேய்ம் அவர்கள் கிறிஸ்துவையும் அவரது இராஜ்யத்தையும் குறிப்பிடுகின்ற 456 வசனப் பகுதிகளை அட்டவணைப்படுத்தினார் (*Alfred Edersheim, *Life and Times of Jesus the Messiah). இவை யாவும் ஒரு மனிதரில் தற்செயலாக எப்படி நிறைவேறியிருக்க முடியும்? "அவருடைய [தேவனுடைய] சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" (யோவா. 7:17) என்று இயேசு உறுதிப்படுத்தியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. முரண்பட்டுச் செல்வதற்குச் சாக்குப் போக்கு எதுவும் இருக்க முடியாது.*

*மதரீதியான மற்ற (இஸ்லாமிய, புத்த, கன்ஃபூஸியஸிச, ஷின்ட்டோயிஸ மற்றும் சொராஸ்டிரிய) புத்தகங்கள் எதிர்காலத்தை முன்னுரைக்க முயற்சிக்கவில்லை என்பதில் வேதாகமத்தின் தனிச்சிறப்பு காணப்படுகின்றது. வேதாகமமானது அதன் தீர்க்கதரிசனங்களினால் அது உண்மையானதா தவறானதா என்று சோதித்துப் பார்க்கும் வாய்ப்புகளைக் கொடுத்துள்ளது - மற்ற மத புத்தகங்கள் எதுவும் இவ்வித வாய்ப்பைத் தேர்ந்து கொள்ளத் தைரியப்படவில்லை.*

*தங்களைத் தாங்களே தீர்க்கதரிசியாக்கிக் கொண்டவர்கள்*

வேதாகமத்தின் தீர்க்கதரிசிகளுடன் ஒப்பிடப்படும் பொழுது சிலர் சங்கடப்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் அரசியல் மேதையான ஜார்ஜ் கேன்னிங் (1770-1827) அவர்கள், தென் அமெரிக்கக் குடியேற்றங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போலவே வளர்ச்சி பெறும் என்று முன்னுரைத்தார். பிரிட்டிஷ் பிரதம மந்திரியாய் இருந்த டிஸ்ரெய்லி (1804-81) அவர்கள் தெற்குப்பகுதி அரசியல் கூட்டமைப்பானது ஒரு சுயாதீனமுள்ள நாடாகும் என்று முன்னுரைத்தார். இராபர்ட் இங்கர்சால் அவர்கள் (1833-99), பத்து ஆண்டுகளுக்குள்ளாக, சபை ஒவ்வொன்றிற்கும் (எண்ணிக்கை) இரண்டிரண்டு திரையரங்குகள் இருக்கும் என்று முன்னுரைத்தார். இத்தாலியக் கணிதவியலாளரான ஜெரோம் கார்ட்ன் (1501-76) அவர்கள் தமது சொந்த மரணத்தின் தேதி மற்றும் நேரத்தை முன்னுரைத்து, அந்தக் குறிப்பிட்ட வேளையில் தற்கொலை செய்து கொண்டார்.

## "முற்றிலும் அன்பான ஒருவர்"

வேதாகமத்தின் மனுஷீகமற்ற தொடக்கத்திற்கான மிகச் சிறந்த உள்ளான ஆதாரங்களில் ஒன்றாக இருப்பது இயேசுவின் பண்பேயாகும். மிக அரிதாகவே ஒரு விதிவிலக்குடன், விசுவாசிகளும் அவிசுவாசிகளும் இயேசுவின் நபர்த்தும் பற்றிப் பாராட்டுவதற்கு ஒன்றிணைகின்றார்கள். அவிசுவாசியாய் இருந்த ஜோசப் ரேனன் (1823-92) என்ற தத்துவ ஞானி, "மனிதர்களின் மகன்களாய்ப் பிறந்தவர்களில் இயேசுவைக் காட்டிலும் பெரியவர் எவரும் பிறந்ததில்லை என்று எல்லா யுகங்களுமே அறிவிக்கும்" என்று எழுதினார். இயேசு தனிச் சிறந்த ஒருவராக, சாரோனின் ரோஜாவாக, பள்ளத்தாக்கின் லீலியாக, பதினாயிரம் பேர்களில் சிறந்தவராக, முற்றிலும் அன்பான ஒருவராக[3] இருக்கின்றார். அவர் வார்த்தையினால் விவரிக்க முடியாத தேவனுடைய வார்த்தையாய் இருக்கின்றார்!

இயேசு பூரணப்பட்டவராய் இருந்த போதிலும், சுயநீதியில் இருந்து விடுதலையானவராய் இருந்தார். அவர் எளிமையானவராயும் தாழ்மையானவராயும் இருந்தார். அவர் பூமிக்குரிய தம் பெற்றோர்களுக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார். தமது சொந்தத் தேவைகளை மறந்த அவர், ஆத்தும ஆதாயம், தேவையில் இருந்தவர்க்கு உதவுதல் - வெறுக்கப்பட்ட சமாரியருக்குக்கூட உதவுதல் - என்பவைகளில் முற்றிலும் தம்மை ஈடுபடுத்தினார். பூமிக்குரிய அதிகாரம் எதையும் அவர் விரும்பாதிருக்கையில், ஆலயத்தின் பரிசுத்த இயல்புக்கு அவமரியாதை காட்டியவர்களை அவர் அதிகாரத்துடன் விரட்டி அகற்றினார். அன்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கான முழுநிறைவான எடுத்துக்காட்டாக இயேசு மற்றவர்களுக்காகத் தம்மையே மறுத்தார். ஒருவர், அவரது நற்பண்புகளை ஏற்றுக் கொண்டு, அவரது தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பது முடியாததாகும்.

இயேசுவைப் போல ஒரு நல்ல மனிதப் பிறவியைக் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. சுவிசேஷங்களை எழுதியவர்கள் அவரைப் பற்றிய கதைகளை கண்டிபிடித்து, ஜோடித்து எழுதியிருந்தார்கள் என்றால்,

*அவர்கள் வெறும் மனிதர்களாய் இருந்து கொண்டே ஒரு முழுமையான தனி நபரை உண்டு பண்ணி, ஒழுக்கங்களுக்கான முழுமையான தொரு அமைப்பை உண்டாக்கியவர்களானதால், இயேசுவால் செய்யப்பட்டதாய்க் கூறப்படும் எந்த அற்புதத்தைக் காட்டிலும் மாபெரும் அற்புதத்தைச் செய்தவர்களாகிவிடுவார்கள்.*

*ஒரு இயேசுவைக் கண்டுபிடிக்குமளவுக்கு அப்போஸ்தலர்கள் நல்லவர்களாகவோ அல்லது பெரியவர்களாகவோ இருந்ததில்லை என்று கல்வியாளர் ஒருவர் குறிப்பிட்டார். இராஜ்ஜியத்தைப் பற்றிய அவர்களின் எண்ணங்கள் மாம்சப் பிரகாரமானதாகவே இருந்தன (மாற். 10:35-45); பரிசேயர்களின் "புளித்தமாவு" பற்றி அவர்கள் புரிந்து கொள்ளவில்லை (மத். 16:5-12); தன்னையே மறுப்பது பற்றி அவர்கள் உணர்ந்திருக்கவில்லை (மத். 16:21-26); ஒழுக்கரீதியான தைரியத்தில் அவர்கள் குறைவுபட்டார்கள் (மத். 26:31-35, 51-56, 69-75); மற்றும் அவர்கள் மற்ற இனத்தவரைக் குறித்துத் தப்பெண்ணம் கொண்டிருந்தார்கள் (லூக். 9:51-56).*

## "நான் நம்பவில்லை"

*சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனிடத்தில், "நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை" (1 இரா. 10:7அ; 2 நாளா. 9:6அ) என்றாள். இது போலவே, கிறிஸ்துவுக்கான ஆதாரத்தைப் பரிசீலனை செய்யும் வரைக்கும் பலர் தேவபக்தியற்றவர்களாகவும், அவிசுவாசிகளாகவும் இருந்தார்கள். அப்படிப் பரிசீலனை செய்ததில் அவர்கள், மனிதரின் வாழ்க்கையில் கிறிஸ்து எதை அர்த்தப் படுத்த முடியும் என்பதில் "பாதியாவது" அவர்களுக்குக் கூறப்படவில்லை என்பதையே கண்டிருக்கின்றார்கள்.*

*சர் ஜார்ஜ் லைய்ட்டெல்ட்டன் (1709-73) அவர்கள் ஏட்டன் மற்றும் இங்கிலாந்தின் ஆக்ஸ்ஃபோர்டு ஆகிய இடங்களில் கல்வி பெற்றார். அவர் பாராளுமன்றம் சென்று, கருவூலத்தில் பெரிய அதிகாரப் பொறுப்புக்களில் பணியாற்றினார். பட்டங்கள் பெற்ற மேதையாகிய அவரது வாழ்க்கை வரலாறு டாக்டர். சாமுவேல் ஜான்ஸனால் எழுதப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இலக்கிய மனிதர்கள் பலரைப் போலவே லைய்ட்டெல்ட்டன் மற்றும் அவரது நண்பர் கில்பெர்ட் வெஸ்ட் ஆகியோர், ஹென்றி செய்ன்ட். ஜாண் போலிங்ப்ரோக், பிலிப் செஸ்ட்டர்ஃபீல்டு, அலெக்ஸான்டர் போப் மற்றும் பல தேவபக்தியற்றவர்களின் செல்வாக்கினால் கிறிஸ்தவ மதத்தைப் புறக்கணித்தார்கள். வேதாகமம் என்பது ஒரு வஞ்சக வேலையென்று முற்றிலுமாக நம்ப வைக்கப்பட்டிருந்த லைய்ட்டெல்ட்டன் மற்றும் வெஸ்ட் ஆகியோர் இயேசு கிறிஸ்து "ஒரு ஏமாற்றுக்காரர்" என்று வெளிப்படுத்த முடிவு செய்தார்கள்.*

*விமர்சனம் செய்வதற்கு லைய்ட்டெல்ட்டன் பவுலின் மன மாற்றத்தையும், வெஸ்ட் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அவ்விருவரும் அதைத் தொடங்குகையில்*

*தப்பெண்ணத்தினால் நிறைந்திருந்தார்கள், ஆனால் அவர்களின் தனிப்பட்ட படிப்புகளும், கிறிஸ்தவத்தைத் தூக்கியெறிய அவர்கள் செய்த முயற்சிகளும் தேவன் மீதும் அவர் வசனத்தின் மீது விசுவாசமுள்ளவர்களாகுதல் என்ற விளைவை அவர்களிடத்தில் ஏற்படுத்தின. தங்களின் படிப்புகளுக்குப் பிறகு, வெளிப்படுத்தப்பட்ட வஞ்சகத்தின் மேல் பெருமை கொள்வதற்கல்ல ஆனால் தங்கள் முந்திய தவறுகள் பற்றி அழுது புலம்பவும், தாங்கள் கண்டறிந்தவை பற்றிக் களிகூரவுமே அவர்கள் ஒன்றுகூடினார்கள்.*

*அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதினார்கள்: "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மீதான கவனித்தல்கள்" என்ற பெயரில் வெஸ்ட்டும், ''பரி. பவுலின் மனமாற்றத்தின் மீதான கவனித்தல்கள்" என்ற பெயரில் லைய்ட்டெல்ட்டன்னும் எழுதினார்கள். லைட்டெல்ட்டன்னின் கண்டுபிடிப்புகள் முதலில் வெஸ்ட்டுக்கு அவர் எழுதிய கடித வடிவில் வெளியிடப்பட்டன. அதில் அவர் முதல் பத்தியில், "... கிறிஸ்தவம் என்பது தெய்வீக வெளிப்படுத்துதல் என்று நிரூபிப்பதற்கு [பவுலின்] மனமாற்றம் மட்டுமே போதுமான ஒரு செயல் விளக்கமாய் உள்ளது" என்று கூறினார்.[4]*

*பவுலின் உறுதியான மனமாற்றம் குறித்து லைய்ட்டெல்ட்டன் அவர்கள் ஒரு ஆராய்ச்சி விசாரிப்பை நடத்தினார்.[5] பின்வரும் நான்கு சாத்தியக் கூறுகள் மட்டுமே நடந்திருக்கலாம் என்று அவர் முடிவு செய்தார்: (1) தமஸ்கு செல்லும் சாலையில் தரிசனம் பற்றிப் பவுல் பொய்க் கதை கூறியிருக்கலாம்; (2) ஆர்வத்தினால் அதிக உற்சாகமடைந்த அவர், தாம் ஒரு தரிசனம் கண்டதாகத் தவறாய் நினைத்திருக்கலாம்; (3) கிறிஸ்தவர்கள் அவரை வஞ்சித்திருக்கலாம்; அல்லது (4) அவர் உண்மையைக் கூறியிருப்பார்.*

*இவைகளில் முதலாம் நிலைப்பாடானது உடனடியாகப் புறக்கணிக்கப்பட்டது. பவுல் ஏன் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியைக் குறித்துப் பொய்க்கதை கூறி, அந்தப் பொய் தம் வாழ்க்கையின் இலக்கை மாற்றியமைக்க அனுமதித்து, பிறகு அந்தப் பொய்க்காக மரிக்க வேண்டும்? வஞ்சகக்காரர்கள் - சொத்து, அதிகாரம், இச்சை அல்லது புகழ் போன்ற - நோக்கங்கள் கொண்டு தங்கள் பொய்க்கதைகளைத் தூண்டுகின்றனர். பவுலிடத்தில் அப்படிப்பட்ட எந்த ஒரு நோக்கமும் இல்லாததால், இம்முதல் நிலைப்பாட்டைப் புறக்கணிக்கும்படி காரண அறிவு கட்டாயப்படுத்துகின்றது.*

*இரண்டாவது சாத்தியக்கூறானது பவுல் தாம் கண்டதாக நினைத்ததை தவறாகக் கொண்ட பைத்தியக்காரத்தனம் கொண்டவர் என்றாக்குகின்றது. இருப்பினும், பரலோகத்தின் கற்பனைக் காட்சியொன்றைக் காண்பதற்குப் பவுல் நேர் மாறான சிந்தையமைப்புக் கொண்டவராய் இருந்தார். இயேசு ஒரு வஞ்சகர் என்று வெளிப்படுத்தும் செயலிலேயே அவரது சிந்தை முழுவதும் மையம் கொண்டிருந்தது. தவறான உற்சாகம் கொண்டவர் உளவியல் ரீதியாகத் தமது மாயத்தோற்றத்திற்குச் சாய்ந்திருக்க வேண்டும். பவுலின் இயல்போ இதற்கு மாறானதாய் இருந்தது. இதுதான்*

விசாரித்தறியாத உணர்வுப் பூர்வமான செயல்பாட்டிற்கு அவர் தம் வாழ்வு முழுவதையும் ஒப்புக் கொடாமல், பகுத்தறிந்து, கவனமாய்ப் பரிசோதனை செய்த செயல்பாட்டிற்கு ஒப்புக் கொடுத்ததற்கு காரணம் ஆகும். இவ்விதமாக இரண்டாவது நிலைப்பாடும் நம்பகமற்றதாயிற்று என்று லைய்ட்டெல்ட்டன் வாதிட்டார். 1 கொரி. 13:1-13ல், பவுல் உதாரகுணத்தை அற்புதங்களுக்கு மேலானதாக வைத்தார். ‘‘இது உற்சாகத்தின் மொழியாக உள்ளதா? ... இவ்வசனப் பகுதியில், உணர்வுந்துதலினாலோ அல்லது பைத்தியக்காரத்தனமான மாயத் தோற்றத்தினாலேயோ தூண்டப்பட்ட மனிதரின் கருத்துக்களாக இவை காணப்படவில்லை, ...’’[6] என்று லைய்ட்டெல்ட்டன் எழுதினார்.

மூன்றாவது நிலைப்பாட்டைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், பவுல் அவர்களை நம்பியிருக்க மாட்டார். அவர் கிறிஸ்தவர்களைக் கொலை செய்து கொண்டிருந்ததால், அவர்கள் கூறியதைக் கவனித்திருக்க மாட்டார். எனவே மூன்றாவது நிலைப்பாடானது மிகவும் பலவீனமானதாய்த் தோன்றுகின்றது.

சாத்தியக்கூறான மற்ற எல்லா மாற்றுக் கருத்துக்களையும் நீக்கிய பிறகு, பவுல் இயேசுவின் அற்புத தரிசனத்தைக் கண்டார் என்று லைய்ட்டெல்ட்டன் ஏற்றுக் கொண்டார். இயேசுவைத் துன்புறுத்துவதிலிருந்து முற்றிலும் மாறி இயேசுவுக்குக்காகத் தியாகம் செய்யும் அளவு செல்வதற்குப் பவுலைப் போலப் பலமுள்ள சித்தம் கொண்டவராய் மாறும் நிகழ்வானது பவுலின் விபரத்தில் இருந்த உண்மைத் தன்மையொன்றையே தர்க்கரீதியான விளக்கமாய்ப் பெற்றிருக்க முடியும்.

மத நம்பிக்கையற்றவர்கள் ஒருபொழுதும் பதில் ஒன்றைப் பண்ணியுரைக்க இயலாத அளவுக்கு இந்த ஆய்வுக் கட்டுரை இருந்ததென்று டாக்டர். சாமுவேல் ஜான்ஸன் அவர்கள் குறிப்பிடுமளவுக்கு லைய்ட்டெல்ட்டன் அவர்களின் வெளியீடு மிகவும் ஏற்புடையதாய்/இணக்கமுடையதாய் இருந்தது. லைய்ட்டெல்ட்டனின் நெருங்கிய நண்பரான டாக்டர். பிலிப் டோட்ரிட்ஜ் அவர்கள் இந்த வெளியீட்டை ‘‘தலைசிறந்தது’’ என்றும் ‘‘நமது காலத்தில் உண்டாக்கப்பட்டுள்ள இவ்வகைப் படைப்புக்களிலேயே மிகவும் முழுமையானது’’ என்றும் விவரித்தார்.

## முடிவுரை

வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதற்கான ஆதாரமானது வேதாகமத்திற்குள்ளேயே இருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் திகைப்பூட்டும் தீர்க்கதரிசனங்களும், அவைகள் இயேசு கிறிஸ்துவில் நிறைவேற்றம் அடைந்ததும், இயேசுவின் முழுமைத்தன்மையான வாழ்க்கையும் இணைந்து வேதவசனங்களின் தெய்வீகத் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒவ்வொரு மனிதரும் வேதாகமத்தை தேவனால் ஏவப்பட்ட வசனம் என்று ஏற்றுக் கொள்ளும்படி இது நிலைத்திருக்கின்றது.

குறிப்புகள்

[1]எருசலேம் நகரானது அசீரியர்களால் தாக்கப்படுகையில், நகருக்குள் தண்ணீர் கொண்டு வருவதற்காக எசேக்கியாவால் சீலோவாம் வாய்க்கால் கட்டப்பட்டது. இக்கால்வாயில் 1880ல் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உத்தேசிக்கப்பட்ட எசேக்கியாவின் ஆட்சிக் காலத்தை (c. 716-687 கி.மு.) உறுதிப்படுத்தி ஆதரிக்கின்றது. அந்த வாய்க்காலே 2 இரா. 20:20ன் நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்துகின்றது. [2]அகிரிப்பாவின் சகோதரியான துருசில்லாள், அப். 24:24ல் யூதஸ்திரீயென்று அழைக்கப்படுகின்றாள். ஏரோதின் குடும்பத்தாரைக் கண்டறிய உதவும் வரைபடம் ஒன்று "அப். 3" இதழில் உள்ளது. [3]உன். 2:1 மற்றும் 5:10, 14ல் இருந்து தழுவப்பட்ட இச்சொற்றொடர்கள், புகழ் பெற்ற கீர்த்தனைகளில் இயேசுவைக் குறிக்கப் பயன்பட்டுள்ளன.

[4]George Lyttelton, "Lord Lyttelton on the Conversion of St. Paul" in James D. Bales, *Saul: From Persecutor to Persecuted.*

[5]பவுலின் மனமாற்றம் பற்றிய விபரங்கள் அப். 9; 22 மற்றும் 26ம் அதிகாரங்களில் உள்ளன.

[6] Lyttelton, *129.*

## ஏவுதலின் புறம்பான ஆதாரங்கள்: சவக்கடல் சுருள்கள்

வேதாகமத்துடன் தொடர்புடைய புதை பொருள் கண்டு பிடிப்புகளில் மிக மிக முக்கியமானது, 1947ல் கண்டறியப்பட்ட சவக்கடல் சுருள் ஆகும். பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் முழுமைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை பற்றிய நமது புரிந்து கொள்ளுதலின் மீது இச்சுருள்கள் ஏற்படுத்தும் செயல் விளைவு என்ன? யாக்கோபு அரசருடைய கட்டளையின்படி மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தின் (KJV) அடிப்படை நூலுக்கும் (கி.பி. 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த மேசோரெட்டிக் வசனம்), ஏசாயாவின் புத்தகத்திற்கும் கும்ரான் குகையில் காணப்பட்ட ஏசாயாவின் புத்தகப் பிரதிகளுக்கும் (கி.மு. 100 வாக்கில் எழுதப்பட்டது) உள்ள திகைப்பூட்டும் இணக்கம் கண்டு கல்வியாளர்கள் ஆச்சரியப் படுகின்றார்கள் (F. F. Bruce, *Second Thoughts on the Dead Sea Scrolls*). யேல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மில்லர் பரோஸ் அவர்கள், "ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் ஒரு புத்தகத்தில் இவ்வளவு சிறிய அளவிலேயே மாற்றம் கொண்டிருப்பதென்பது ஆச்சரியமான விஷயமாகும்" என்று எழுதினார். (Millar Burrows, *The Dead Sea Scrolls*). மேலும் அவர், தேவபக்தியற்றவர்களுக்கு பாரம்பரிய வசனத்தைக்

காட்டுவதே சவக்கடல் சுருள்களின் முதன்மை முக்கியத்துவமான பணியாகும் என்றும் எழுதினார். காணப்படும் மாறுபாடுகள் “மொழிபெயர்ப்பு நடைபெற்ற கால இடைவெளியைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப் போதுமானவைகள் அல்ல.” மற்றும் இம்மாறுபாடுகளைக் கருதும்போது, “வேதாகமத்தின் போதனைகள் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலை மாற்றக் கூடியதெதுவும் [இச்சுருள்களில்] இல்லை.”

யேல் பல்கலைக் கழகத்தின் இன்னொரு பேராசிரியர், புதைபொருள் ஆராய்ச்சியினால் உறுதிப்படுத்தப்பட்ட வேதவசனங்களின் ஒருமைத் தன்மை கண்டு ஆழ்ந்த மனப்பதிவைப் பெற்றார். அவர், “ஆமோஸ், ஏசாயா, இயேசு அல்லது பவுல் ஆகியோர் சிந்தித்தது மற்றும் போதித்தது பற்றிய நமது அறிவானது, கண்டு பிடிக்கப்பட்ட எந்தவொரு கையெழுத்துப் பிரதியினாலும் அதிகப்படவோ அல்லது மாற்றப்படவோ இல்லை” என்று எழுதினார் (Joseph P. Free, *Archaeology and Bible History*). இருதயங்களில் வேதாகம விசுவாசம் நாட்டப்பட்டிராத சில மக்கள், வேறு எதைக் காட்டிலும் மனித குலத்திற்கு மாபெரும் நன்மைகளை அதிகம் செய்துள்ள இப்புத்தகத்தில் குறைபாடு காண்பதில் மகிழ்ச்சியடைவதென்பது பரிதாபத்திற்குரியது.

இது தொடர்பாக, வேதாகம விசுவாசிகளைச் சங்கடப் படுத்தும் வகையில் சிலவற்றைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையில் சிலர் சவக்கடல் சுருள்களை ஆராய்ச்சி செய்யப் பல மணி நேரங்களைச் செலவிட்டார்கள். கும்ரான் கண்டுபிடிப்புகள், இயேசு என்று ஒருவர் இருந்திருக்கவே இல்லை என்று முடிவாய் நிரூபிக்கின்றன என்று பிரிட்டிஷ் அச்சகம் ஒன்றின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதில் இவ்வகையான விருப்பத்தின் உச்சபட்சக் காட்சி காணப்படுகின்றது. இச்சுருள்கள் இயேசு பிறப்பதற்கு நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்டன என்பதை ஒருவர் உணர்ந்து, அதினால் அவரைப் பற்றி (தீர்க்க தரிசனம் தவிர மற்ற வகையில்) குறிப்பிட்டிருக்க முடியாது என்பதையும் உணரும்போது, அவிசுவாசிகள் குற்றம் காண்பதற்கு எவ்விதம் பரலோகத்தையும் பூலோகத்தையும் சூழ்ந்திருக்கிறார்களென்றும், அவிசுவாசத்தின் பக்கம் ஆதாரக் குறைவு இருப்பதையும் ஒருவர் காண்கின்றார்.